விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 033 வள்ளுவர் ஆண்டு 2057 தை 07 புதன்கிழமை (21.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
16 EDITION
JITF 2026
16TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்னும் 2 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

# நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்படும்

## பாராளுமன்றில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

- மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு.
- புதிய அரசியலமைப்பை பொதுமக்களிடம் சமர்ப்பித்து கலந்துரையாடப்படும்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சை காரணமாக மூடப்பட்டிருந்த அரச பாடசாலைகள் இன்று (21) முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி இந்த ஆண்டு பாடசாலையின் முதலாம் தவணையின் முதல் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்று 15ஆம் பக்கம் பார்க்க

## வீதி விபத்துக்களால் 19 நாட்களில் 120 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடப்பு ஆண்டு ஆரம்பம் முதல் ஜனவரி 19ஆம் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.போதனா வைத்தியசாலையில் சி.ரி ஸ்கான் பரிசோதனை வழமைக்குத் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சி.ரி ஸ்கான் பரிசோதனைகள் நேற்றுமுதல் வழமைக்குத் திரும்பியுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக சி.ரி ஸ்கான் இயந்திரம் பழுதடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழில் வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குக

### ஆளுநர் செயலகத்துக்கு முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி வட மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 15ஆம் பக்கம் பார்க்க



உள்ளே...
என்.சொக்கனின்
அடாவடிக் கோட்டை CIA
குறைகேள் அரங்கு
வாசிக்கத் தவறாதீர்கள்





## வட தாரகையை விரைந்து இயக்குவதற்கு நடவடிக்கை

### நெடுந்தீவு பிரதேச செயலரிடம் வட பிராந்திய கடற்படைத் தளபதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கான படகுகள் சேவைகள் இன்றி, பயணிகள் பெரும் இடர்களைச் சந்தித்து வரும் நிலையில், வடதாரகையை இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக கடற்படை வடபிராந்தியக் கட்டளைத் தளபதி நெடுந்தீவு பிரதேச செயலரிடம் உறுதி 15ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமம் மந்தைவெளியில் குடும்பஸ்தர் கொலை

### இருவருக்கு மரண தண்டனை யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம், மந்தை வெளிப் பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு இடம் பெற்ற கொடூரக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதித்து யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி 15ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலையில் 34 கோயில்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன

### சர்ச்சையைக் கிளப்பினார் சரத் வீரசேகர

(திருகோணமலை)

திருகோணமலையில் 34 கோயில்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுமாறு நீதிமன்றத்தால் மாநகர சபைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திருகோணமலை புத்தர் சிலை சம்பவத்தில் கைது செய்யப்பட்ட தேரர்களின் வழக்கு தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் தொடர்ந்து பேசியதாவது, 04ஆம் பக்கம் பார்க்க

## வாகன இறக்குமதியால் ரூ.904 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்வதன் மூலம் அரசாங்கம் 441 பில்லியன் ரூபாயை எதிர்பார்த்த போதிலும், இதன் மூலம் இதுவரை 904 பில்லியன் ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் ரோஹித அபே குணவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் நிஷாந்த ஜயவீர இதனைத் தெரிவித்தார். 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி, ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



கடந்த 10.12.2025 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் நிஷாந்தினி நித்திலவர்ணன்

**(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 22.01.2026 (வியாழக்கிழமை) அதிகாலை 4.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நிறைவுறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 24.01.2026 (சனிக்கிழமை) நண்பகல் 11.30 மணியளவில் தம்பசிட்டி இராஜசரஸ்வதி மண்டபத்தில் (தும்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை அருகாமையில்) நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

(6602)

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
பொருளியல் பாட ஆசிரியர்
**திருமதி சாந்தினி உதயகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்

**செல்லையா சரஸ்வதி**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும்
உறவுகளுக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 17.12.1936
உதிர்வு 08.01.2026


(C-4838)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/மகாஜனக் கல்லூரி**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

---

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.04.1938
மறைவு 19.01.2026

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்
துரைராசா இளங்குமரன் அவர்களின்
பாசமிகு தந்தை

**அமரர் சிற்றம்பலம் துரைராசா**

அவர்களின் பிரிவினால் துயருற்று
இருக்கும் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4857)

**பிரிவில் துயர் கொள்ளும் கல்லூரிச் சமூகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**

---

# நினைவஞ்சலி



தோற்றம் 04 - 08 - 1943
மறைவு 28 - 07 - 2023



தோற்றம் 18 - 06 - 1944
மறைவு 01 - 02 - 2025

## அமரர் காசிலிங்கம் செல்லத்துரை

**(ஓய்வுநிலை அஞ்சல் அத்தியட்சகர் - முல்லைத்தீவு மாவட்டம்)**

## அமரர் செல்லத்துரை தெய்வானை

பார் போற்றும் உத்தமராய் வாழ்ந்திருந்த தெய்வங்களே
ஈர் மூன்று செல்வங்களை ஈன்றெடுத்து இனிதாக
பண்புள்ள வித்தகராய் பரிணமிக்க வைத்தவரே
யார் தேற்றுவார் உங்கள் ஞாபகங்கள் வாட்டிடுதே.

ஆண்டவன் அழைத்ததனால் ஐயா முன் செல்ல
தாண்டினார் அம்மாவும் தரணியிலே வாழ்வுதனை
வேண்டுகின்றோம் தினந்தினமும் வேலவனின் திருவடியை
மீண்டும் ஓர் பிறப்பெடுத்து எம்மிடமே வந்திடவே.

எமது தாயாரின் முதலாம் ஆண்டும் தந்தையாரின் இரண்டரையாம் ஆண்டும் நினைவு நாளான
இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குளப்பன்,
இடைக்காடு,
அச்சுவேலி.

நீங்கா நினைவுகளுடன் :-
வி.நாகநந்தினி, செ.செல்வவேல், செ.இரத்தினவேல்,
கு. நாகசொரூபி, செ.செந்தில்வேல், நி.நாகநளினி

(1963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிரான காலநிலையால் அதிகரிக்கும் வைரஸ் தொற்றுக்கள்

(கொழும்பு)

**இலங்கையில் நிலவும் குளிர் காலநிலையுடன் பல வைரஸ் நோய்கள் பரவுவதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

இந்த நோய்கள் குறிப்பாக சிறுவர்களிடையே பரவலாகக் காணப்படுவதாக கம்பஹா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ரவீந்திர உடகமகே குறிப்பிட்டார்.

குளிர் மற்றும் வறண்ட வானிலை பல்வேறு வைரஸ் தொற்றுகள் விரைவாகப் பரவுவதற்கு பங்களிக்கின்றன.

இது பிரதானமாக மேல் சுவாசக் குழாயைப் பாதிக்கிறது.

எனவே, காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி, கடுமையான தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் வயிற் றுப்போக்கு ஆகிய அறிகுறிகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் அல்லது நோயாளிகள் சுவாசிப்பதில் சிரமத்தை அனுபவித்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் என்று அவர் மேலும் அறிவுறுத்தினார்.

இதற்கிடையில், நாடு முழுவதும் காற்றின் தர அளவு தற்போது குறைவாகவே இருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் ஆணையகம் (CEA) குறிப்பிட்டது.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் நிலைமை மேம்பட்டு குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக CEA செய்தித் தொடர்பாளர் அஜித் குணவர்தன குறிப்பிட்டார். (நி)

# புதிய கல்வி மறுசீரமைப்பை தவிர்க்க முடியாது

## முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா

(கொழும்பு)

புதிய கல்வி மறுசீரமைப்பு மிகவும் அவசியம் அது எமது கலாசீரம் மற்றும் எமது நாட்டுக்கே உரிய வகையில் இடம்பெற வேண்டும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



அத்துடன் சர்வமதத் தலைவர்கள், துறைசார் நிபுணர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பெற்றோர்களிடம் இருந்தும் கல்வி மறுசீரமைப்பு பற்றி ஆலோசனை பெற வேண்டும்.

எனவே, கல்வி மறுசீரமைப்பை ஒரே நாளில் செய்ய முடியாது. முறையாக அதற்குரிய பணி இடம்பெற வேண்டும் என்பதே எனது கோரிக்கை என சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பச்சைமிளகாய் அறுவடை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் பச்சைமிளகாய் செய்கையின் முதலாவது அறுவடை கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் இந்த முயற்சியினை நவீன விவசாயத்தைக் கற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள்,

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள்,நவீன விவசாய செய்கையினை முயற்சிக்க விரும்பும் இளைஞர்கள் நேரில் வருகைதந்து பார்வையிடுவதோடு இது தொடர்பான தொழில்நுட்பம், செலவீன-வருமான கணக்கீடு, பராமரிப்பு முறைகள், பயிரிடல் செயல்முறைகள் குறித்து நேரில் கற்றுக் கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வாரநாட்களில் காலை 9 மணி முதல்- மாலை 4 மணிவரை மாவட்டச் செயலக அலுவலக தோட்டத்திற்குச் சென்று பார்வையிடலாம் என கிளிநொச்சி மாவட்ட செயலக ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)



தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் 17 வயதுப் பிரிவினருக்கான உயரம் பாய்தல் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி கு.சங்கவி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குறை கேள் அரங்கு



வர்ஷன்

## புகையிரதக் கடவையில் விதி மீறுபவர்களைக் கவனிப்பார்களா?

நாம் விடும் சிறிய தவறு வாழ்வில் மீளமுடியாத துயரத்தை ஏற்படுத்தி விடுகிறது. கவனயீனத்தின் உச்சம் பல உயிர்களைப் பறிக்கிறது எனின், ஆறறிவு படைத்த மனிதனாய் நாம் பிறந்ததில் பயனில்லை.

தற்போது வடக்கில் புகையிரத விபத்துக்கள் அதிகரித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் கவனயீனம் என்பதுடன் அவசரத்தையும் குறிப்பிட முடியும்.

பொறுமையாக புகையிரதக் கடவை சமிக்ஞை விளக்குகளை அவதானி த்துப் புகையிரதக் கடவையைக் கடக்கிறோமா? என நம்மை நாமே கேள்வி கேட்டால் உண்மை புரிந்து விடும்.

பிரதான வீதிகளைக் கடக்கும் புகையிரதக் கடவைகளில் சமிக்ஞை விளக்கு எரியும். அபாய ஒலி ஒலித்துக் கொண்டிருக்கும். வீதி மூடப்பட்டிருக்கும்.

ஆனால் பலர் அவ் விடத்தில் பொறுமையாக நின்று புகையிரதம் சென்றதும் ஒழுங்காக கடவையைக் கடப்பதில்லை.

ஏதோ, மாட்டுப்பட்டி அடைக்கப்பட்டிருப்பது போலவும். அவை வெளியே செல்ல முண்டியடிப்பது போலவும் மோட்டார் சைக்கிளை முறுக்கியபடி அங்கு நிற்பவர்களே அதிகம்.

என்னால் பொறுமையாயெல்லாம் நிற்க முடியாது என்று அங்குமிங்கும் பார்த்து விட்டு குறுக்கே போபவர்கள் சிலர். புகையிரதம் வீதியைக் கடந்த பின்னர் புகையிரதக் கடவை அகல்வதற்கு முன்னர் குறுக்கால் வெட்டி எடுப்பவர்கள், எம்மால் வலது- இடது பக்கங்களாக பிரிந்து செல்ல முடியாது என்று முண்டியடிப்பவர்கள் எனப் பலரையும் பார்க்கும் போது, இவர்கள் பிள்ளையைக் கிணற்றுக்கட்டில் வளர்த்தி விட்டு வந்தார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது.

இதில் புகையிரதக் காப்பாளர்களின் பணி என்ன என்பதை புகையிரதத் திணைக்களம் வகுக்க வேண்டும்.

இவ்வாறு குறுக்கே இழுப்பவர்கள் பற்றியும் அந்தரப்பட்டு மந்தைகள் போல துள்ளியடிப்பவர்கள் பற்றியும் அவர்கள் இம்மியும் கவனிப்பதில்லை. சுருங்கச் சொன்னால், அவர்கள் அந்த 5X5 அறையிலிருந்து தலையைக் கூட வெளியே காட்டுவதில்லை.

புகையிரதக் காப்பாளர்களுக்கு சில அதிகாரங்களை வழங்கி அதனூடே போக்குவரத்து விதியை மீறுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீறுபவர்களின் வாகன இலக்கங்களைக் குறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கும் நடைமுறையையேனும் கொண்டு வருவது நல்லது.

இல்லையேல் புகையிரத விபத்துக்களினால் நிகழும் மரண எண்ணிக்கை வடக்கில் இன்னும் அதிகரிக்கும் என்பதே உண்மை.



அன்பு வாசகர்களே!

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.121 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 - 06 - 1938



மறைவு
19 - 01 - 2026

## நவமணி இராசரத்தினம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி இராசரத்தினம் அவர்கள் கடந்த 19.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னம் தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் இராசரத்தினம் (ஒய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், பிலோமினா, திருநாவுக்கரசு (அதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பூங்கோதை (கனடா), சத்தியவாணி (அமெரிக்கா), சிவாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். பிரதேச செயலகம்), மகிந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகரட்ணம் (கனடா), கேமேந்திரன்(அமெரிக்கா), ஸ்ரீஸ்கந்தராசா (அதிபர், யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்), நிஷாந்தினி (ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் மதனிக்கா, இன்றிக்கா, தீபக், மயூரன், மாதுளன், வைஸ்ணப்பிரகாஸ், விஸ்னுஜன், பிரித்திஸ்ரீ, ஸ்ரீனிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.01.2026 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

5/94, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(6607)

தகவல் : குடும்பத்தினர்
T.P - 077 670 2683

# முதலாவது ரி-20 போட்டி

## மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அபார வெற்றி!




ரி-20 உலகக் கிண்ண கிரிக் கெட் தொடர் அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் தொடங்குகிறது. அதற்கு முன்னதாக அனைத்து அணிகளும் ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. அந்த வகையில் மேற்கிந்தியதீவுகள் ஆப்கானிஸ்தான் அணிகள் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகின்றன. இரு அணிகளுக்கு இடையேயான முதல் ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணியின் தொடக்க வீரர் குர்பாஸ் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அடுத்து வந்த செடிக்குல்லா அடல் 2 ஓட்டங்களில் வெளியேறினார். இதனால் 19 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து ஆப்கானீஸ்தான் திணறியது.

இதனையடுத்து இப்ராஹிம் சத்ரான்- தர்விஷ் ரசூலி ஜோடி சேர்ந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர். அதிரடியாக விளையாடிய இருவரும் அரைசதம் கடந்து அசத்தினர்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 181 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சத்ரான் 87 ஓட்டங்களும் ரசூல் 84 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியில் 4 வீரர்கள் மட்டுமே இரட்டை இல க்க ஓட்டங்களை எடுத்தனர். மற்றைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. அதிகபட்சமாக குவென்டின் சாம்ப்சன் 30 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் ஆப்கானிஸ்தான் அணி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (3)

## நிறைவேற்று...

நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வளமான நாடு, அழகான வாழ்க்கை" கொள்கைப் பிரகடனத்தின் 194ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, புதிய அரசியலமைப்பு ஒன்றைத் தயாரித்து, அதனைப் பொதுமக்களிடம் சமர்ப்பித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்த பின்னர், தேவையான மாற்றங்களை மேற்கொண்டு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அதனை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

தற்போது புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்காக இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கைகள் மற்றும் ஏனைய அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து அதன் அடிப்படை எண்ணக்கருப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்துப் பாராளுமன்ற ஆட்சி முறையை நிறுவுவதற்கும், நிறைவேற்று அதிகாரங்கள் அற்ற ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போதே முன்னெடுக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவராமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க இயலாது. இந்த முறையை ஒழிப்பதற்கான வழிமுறைகள் குறித்துத் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன.

நாட்டின் முதன்மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தும் அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான குறிப்பிட்ட கால எல்லை எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.

மாகாண சபைத் தேர்தல்களை மிக விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 (ஆ) பிரிவின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிகளின்படி, ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் எல்லை நிர்ணயக் குழுவினால் தேர்தல் தொகுதிகள் மற்றும் எல்லைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த அறிக்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே தேர்தலை நடத்த முடியும்.

மேற்படி சட்ட விதிகளின் கீழ் எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடையாமையே மாகாண சபைத் தேர்தலை இதுவரை நடத்த முடியாமல் போனதற்கான காரணமாகும்.

எனவே, எல்லை நிர்ணயத்தைப் பூர்த்தி செய்து தேர்தலை நடத்துவதா? அல்லது 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்து தேர்தலை நடத்துவதா? என்பது குறித்துத் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுகளுக்குப்பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும். எவ்வாறாயினும், இச்செயற்பாடுகளின் இறுதியில் தேர்தலை நடத்துவதற்காக 2026 வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், அரச குற்றவியல் வழக்குத் தொடரகம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவையான புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார். (ம-7)

## திருகோணமலை...

திருகோணமலை கடலோரப் பகுதியில் புத்தர் சிலையொன்றை நிறுவியமைக்காக பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 09 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி .

திருகோணமலையில் குறித்த இடத்தில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த இடத்தை சுற்றி வேலி அமைப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளது.

மேலும், கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தினால் 1951ஆம் ஆண்டு முதல் அங்கிருந்த தஹம் பாடசாலையை புனரமைப்பதற்கான தெளிவான அனுமதி கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான உத்தியோகபூர்வ ஆவணங்கள் இருக்கும் நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான ஒரு சிங்கள சட்டத்தரணி, அந்த ஆவணங்கள் போலியானவை எனக் கூறி பிக்குகளை சிறையிலடைக்க கடுமையாக முயற்சித்துள்ளார்.

குறித்த இடத்தில் மேசை ஒன்றின் மீது புத்தர் சிலையே வைக்கப்பட்டது என்றும், அது மழையினால் சேதமடையாமல் இருக்க தற்காலிக மறைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாலையில் அங்கு வந்து பிரித் பாராயணம் செய்த பிக்குகள் மற்றும் பொதுமக்களே கடலோர பாதுகாப்புச் சட்டத்தை மீறியதாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை கடற்கரை ஓரங்களில் சுமார் 8 கோவில்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன. 34 சட்டவிரோத கோவில்களை அகற்றுமாறு நீதிமன்ற உத்தரவு இருந்தும் அவை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வடுன்னாகல பகுதியில் பௌத்த சிதைவுகளை அழித்து அதன் மீது சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்த பூசாரி உள்ளிட்ட குழுவினர் கைது செய்யப்பட்ட போதிலும், இரண்டு வருடங்கள் கடந்தும் அவர்கள் மீது இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

பௌத்த பிக்குகளுக்கு எதிராக மாத்திரம் சட்டமா அதிபர் திணைக்களம் பாரபட்சமாக நடக்கின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை பௌத்த மதத்திற்கு எதிராகச் செயல்படுவதாலேயே அரச அதிகாரிகளும் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி

**(அணி - II)**

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1. க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தி.
2. பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**கற்கை நெறிக் காலம்** - ஒரு வருடம்
(இரண்டு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்)
**மொழிமூலம்** - தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம்** - ரூபா 55,000.00
**விண்ணப்பப்படிவக் கட்டணம்** - ரூபா 1000.00

**விண்ணப்பிக்கும் முறை**

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk), நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தில் கோரப்படும் விடயங்களுக்குச் சரியான விபரங்கள் மற்றும் கொடுப்பனவுச்சீட்டினை உள்ளீடு செய்வதன் மூலம் விண்ணப்பத்தினை மேற்கொள்ள முடியும். (விண்ணப்ப கட்டணத்திற்கான கொடுப்பனவை எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் (89002278003452) எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்ப கட்டணமாக 1000.00 ரூபாவினை செலுத்தி மேற்கொள்ள முடியும்.)

விண்ணப்பித்தமையினை உறுதி செய்ய, சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் **(Submitted Application Form)** தங்களது மின்னஞ்சலுக்கு பதிலளிப்புடன் அனுப்பப்படும். அப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனுடன் கொடுப்பனவுச் சீட்டின் மூலப்பிரதி **(Original)** மற்றும் கல்வி,தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **09.02.2026 (திங்கட்கிழமை)** அல்லது அதற்கு முன்னர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் (Registered Post) மூலமாகவோ அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **'உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி -'அணி II'** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

- **பதிவுத்தபால் அனுப்ப வேண்டிய முகவரி:-**
  **பிரதிப்பதிவாளர்,**
  **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
  **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
  **திருநெல்வேலி,**
  **யாழ்ப்பாணம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி : 09.02.2026**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C-4851)

## திருத்த அறிவித்தல்

17.01.2026 ஆம் திகதி சனிக்கிழமை வெளிவந்த பத்திரிகையில் வேலணை பிரதேச சபையின் சந்தைகள், கடைகளுக்கான ஏல **அறிவித்தல்** எனக் குறிப்பிடப்பட்ட விடயம் **மீள் கேள்வி அறிவித்தல்** என திருத்தப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

(இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 350 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 800 | 500 | 600 | 450 |
| தக்காளி | 600 | 500 | 500 | 600 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 250 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 280 | 230 |
| கரட் | 400 | 450 | 500 | 600 | 450 | 380 |
| பூசணி | 100 | 140 | 150 | 150 | 120 | 70 |
| புடோல் | 250 | 200 | 200 | 320 | 300 | 275 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 250 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 400 | 150 | 340 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 180 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 700 | 400 | 1000 | 500 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 400 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 250 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 600 | 900 | 350 |
| லீக்ஸ் | 350 | 400 | 500 | 600 | 450 | 380 |
| பீற்றூட் | 450 | 300 | 1000 | 500 | 500 | 550 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 800 | 700 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 500 | 400 | 500 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 400 | 320 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 70-120 | 150 | 120 | -- | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 300 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-140 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 600 | 300 | 500 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 200 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 90 |

## இராசிபலன்

21.01.2026
தை 07 ,புதன்கிழமை
திருதியை பின்னிரவு 2.58 மணிவரை இராகுகாலம் 12.35-2.05 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 2.32 மணிவரை
சுப நேரம் 5.05-6.35 மணிவரை

சந்திராஷ்டமம்:
பூசம், ஆயிலியம்.

**வளவன்**




குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், போசன சுகமுண்டு.




பாதியில் நின்ற பணியை மீதியும் தொடரலாம், பகை விலகி பாசம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை, எடுத்த காரியங்களை நிறைவேற்ற கடின உழைப்புத் தேவை.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.




வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழிலில் எதிர்காலத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.




விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகை உண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தைத் தரலாம்,பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும்,மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




சான்றோர்களின் சந்திப்பில் சந்தோசம் அடைவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




தொழிலில் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துன்பத்தை எதிர்க்கத் துணிபவன் வாழ்க்கையில் பெரும் தோல்வியை அடைவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Junior

## Spoken & Written எலக்கியூசன் (Elocution)

## பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 79மாணவர்களைப் பாராட்டுகின்றோம்



P.அஷ்வின் · S.டிஷாரிகா · S.ஜிதுசியன் · S.சன்ஜிற்றா · P.அனன்யா · J.தியோனியஸ் · S.கனிஷ்யா · R.பிரணண்யா · S.சாதுரியா · K.ஷரத்




A.அனந்திதா · G.சந்தோஷி · K.யதுஷ்னா · K.நதீஷா · A.ஆதனா · S.கருஷ்ணி · S.ஹர்ஷா · P.ஜஸ்வினி · S.ஜெனிஷா · S.டயனிகா



P.ஹஸ்மிதா · B.மகிமா · R.வர்ணிக்கா · P.ரித்திகா · S.மிதுநாஷ் · R.ரிஷாந் · K.ஷிருஸ்ரிஹரன் · T.ஸ்ரீகிருஷ்ணிகா · T.ஹர்சிஜன் · D.நற்றாலியா



S.சிவனுஜா · S.பெனுஷ்கா · A.நிவின் · R.ஆத்விக் · R.வர்ணிகா · S.கிஷான்ராஜ் · N.கிருஷ்ணிகா · P.அக்ஷயா · T.ரோகித் · K.ருக்சானி




R.கஷ்மிகா · J.ஸஷ்விகா · J.அகரன் · S.அக்ஷரா · A.அகல்விழி · A.அத்விகா · J.அஹாரா · G.பவனேஸ் · V.வைஷ்ணவின் · U.காருண்யா



S.கனிஸ்ரிகா · J.அஷ்மிகா · N.இலக்கியா · S.சகீஷன் · T.கேசகி · K.வர்ஷா · K.ஹரிணி · S.கிருத்திக் · L.அன்றோனிக் · S.அத்விகா



T.கஜலினி · P.ஆருக்ஷா · E.சுபீரத்தனன் · M.பிரீத்திகா · V.தேஜஸ்ரீ · K.மித்ரா · R.அபிஷ்னா · R.அபிஷேக் · R.அபினாஷ் · L.கிறிஷிகா



M.சாகித் · R.பிரித்விக் · P.மானிஷா · J.சாகித்யன் · P.அகர்ணீஷ் · S.ஆஷிகா · M.நிக்சிகா

D.மதுவர்ஷா

K.ஆதுலன்

**05.02.2026 இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்**

**ஆசிரியர்-திருமதி.பிரகாஷ் சுமிதா**

- ☞ Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
- ☞ English Classes (ஆங்கில வகுப்புக்கள்) நேரடியாகவும் Zoom மூலமாகவும் நடைபெறும்

(1964)

**இல.925, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். சங்கிலியன் மன்றம் 077 199 9630**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 . 03 . 1964

விண்ணில் 31 . 01 . 2025

அமரர். பேராசிரியர் கலாநிதி

## அம்பலம் புஸ்பநாதன்

(வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை)

திதி : 21.01.2026

மாதங்கள் பன்னிரண்டு கடந்ததுவோ.
மாறவில்லை எம் துயரம் ஆனாலும் எங்கள் இதயம்.
இன்று தான் உங்களை இழந்தது போல் துடிக்கிறது..
உங்கள் குரல் கேட்காத காலை.
உங்களுடன் பேசாத நாட்கள் எண்ணிக்கையாகி விட்டன..
ஆனாலும் உங்களை நினைக்காத ஒரு நொடியும் இல்லை..
பேராசான் நீங்கள் உங்கள் ஞானத்தால் நான் திரும்பி வந்துவிடுவேன்
என்று சொன்ன குரல் இன்றும் எம் காதுகளில் ஒலிக்கின்றது.
எங்கள் வீடு சத்தமில்லாது மௌனமாய் இருக்கிறது உங்கள் சிரிப்பின்றி..
நல்வழி காட்டிய உங்கள் கருணையை
பேறாக பெற்றோம் பெருமையும் கொண்டோம்
நீறாகிப் போனாலும் நீங்களே எங்கள் திசைகாட்டி.
உங்கள் நினைவுகளைச் சுமந்து
உங்கள் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்..
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வமஹால், அல்வாய்.
புவிஅகம், வவுனியா.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-4849)




# மரண அறிவித்தல்



மலர்வு 17 . 09 . 1941

உதிர்வு 19 . 01 . 2026

## சண்முகம் சரஸ்வதி

யாழ் புத்தூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சரஸ்வதி அவர்கள் 19.01.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரி இலட்சுமி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு முத்து அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பு சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, கந்தசாமி அவர்களின் பாசமிகு சகோதரியும், மகேஸ்வரி (லண்டன்), கோமதி, காலஞ்சென்ற கோபாலராசா மற்றும் மாலினி (லண்டன்), தயாபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயரும், இராஜேந்திரன், காலஞ்சென்ற கந்தசாமி, ஜெகநாதன், திருவருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகிசா, சுகிசா (கனியோன்-நிரோஜிதா), கஜிவன், கஜந்தன், சாருசன், சமிலன், பிரணிதா, சயனவி, அட்சிதா ஆகியோரின் பேர்த்தியாரும் ஷரனவியின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2026 இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்
077 [illegible]

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(C-4850)

# மரண அறிவித்தல்



மலர்வு 25 . 11 . 1949

உதிர்வு 18 . 01 . 2026

## குலகுணேஸ்வரி கந்தையா

'ஆனந்தகம்' கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் மூளாய், கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட குலகுணேஸ்வரி கந்தையா அவர்கள் கடந்த 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஸ்தாபகர் காலஞ்சென்ற கந்தையா உபாத்தியாயர் அவர்களின் பேர்த்தியும், சி.மு.அப்புத்துரை சேதுநாயகி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சண் கந்தையா (யாழ்.மாநகர சபை பொது நூலக ஓய்வு பெற்ற நூலகர்) அவர்களின் அன்பு மனைவியும், குமுதினி (ஆசிரியர்), ஜபாலினி, துவாரகன் (பொறியியலாளர்), மைதினி, மாதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஸ்வநாதன், பிரணவன், திலீபன், துஷந்தன், நாராயணி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான தற்பரானந்தன் (ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்), தேவானந்தன் (பொறியியலாளர்) மற்றும் நித்தியானந்தன், சர்வானந்தன், குலகுணராணி, குலகுணசக்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் நகுலாம்பிகாதேவி, ஹேமாங்கினி, சித்திரா, செல்வக்குமாரன் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியும், அட்சயா, அகரன், திரிஷ்மன், தனுர்மன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.01.2026 இன்று புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்
021 224 0129

'ஆனந்தகம்',
கந்தரோடை, சுன்னாகம்.

(6604)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாடசாலை பேருந்து கோர விபத்து 13 மாணவர்கள் உயிரிழப்பு
## தென்னாபிரிக்காவில் சோகம்




(ஜோகன்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் கவுடேங் மாகாணத்தில் லொறி மீது பாடசாலை மினி பேருந்து மோதிய கோர விபத்தில் 13 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழுந்துள்ளனர்.

தனியார் வாகனம் பல்வேறு தொடக்கப் பள்ளிகளை சேர்ந்த மாணவ - மாணவிகளை ஏற்றிச் சென்றது. இந்தப் பேருந்து மற்றொரு வாகனத்தை முந்திச் சென்றது. அப்போது திடீரென எதிரே வந்த லொறி மீது பயங்கரமாக மோதியது. இதில் 11 பாடசாலை மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த இரண்டு மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

மேலும், படுகாயம் அடைந்த 7 மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த விபத்தில் பேருந்து ஓட்டுநரும் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு தென்னாபிரிக்கா ஜனாதிபதி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். (3)

# கிரீன்லாந்தை கைப்
# உலகம் பாதுகாப்பா
# ட்ரம்ப் மிரட்டல்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கா கிரீன்லாந்தைக் கைப்பற்றும் வரை உலகம் பாதுகாப்பாக இருக்காது என்று குறிப்பிட்ட ட்ரம்ப், நோபல் பரிசை தமக்கு நிராகரித்ததன் பின்னர், இனி அமைதியைப் பற்றி பரப்புரை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்தைக் கைப்பற்றும் தனது நோக்கங்களைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

தனது கோரிக்கைகளை எதிர்ப்பவர்களுக்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முக்கியமான சிலருக்கு, கூடுதல் வரிகளை விதிப்பதாக அச்சுறுத்தியதுடன், அந்தத் தீவு மீதான சீன மற்றும் ரஷ்ய அச்சுறுத்தல்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், கிரீன்லாந்தைக் கைப்பற்ற வன்முறையைப் பயன்படுத்துவாரா என்பதை ட்ரம்ப் தெளிவுபடுத்தவில்லை, குறிப்பாக டென்மார்க்குடனான பேச்சுவார்த்தைகள் எந்தப் பலனையும் அளிக்காத நிலையில் இந்த சிக்கல் உருவாகியுள்ளது.

கிரீன்லாந்து மீது இராணுவ நடவடிக்கை சாத்தியமா என்ற கேள்விக்கு, ட்ரம்ப் பதிலளிக்க மறுத்துள்ளார்.

அத்துடன், கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவதை விடுத்து, உக்ரைனில் கவனம் செலுத்தட்டும் என்றார்.

ஐரோப்பா மற்றும் தனது நேட்டோ கூட்டாளிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தபோதிலும், கிரீன்லாந்தை ஏதேனும் ஒரு வழியில்"

## கலைக்கப்படும் ஜப்பான் பாராளுமன்றம்; பெப்ரவரி 8ஆம் திகதி பொதுத்தேர்தல்

## ஜப்பான் பிரதமர் அதிரடி



(டோக்கியோ)

ஜப்பான் பிரதமர் சனா தகாய்ச்சி, அந்நாட்டு பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பெப்ரவரி மாதம் பொதுத்தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு வியூகத்தை வலுப்படுத்தவும், பொருளாதார செலவினங்களை அதிகரிக்கவும் மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் இந்த அதிரடி தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஜப்பான் பாராளுமன்றத்தின் கீழ் சபையை கலைக்க பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

இதற்கான வாக்கெடுப்பு பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் ஜப்பானின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்ற சனா தகாய்ச்சி எதிர்கொள்ளும் முதல் தேர்தல் களம் இதுவாகும்.

பாராளுமன்றத்தின் கீழ் சபையில் உள்ள மொத்தம் 465 இடங்களுக்கும் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

தற்போது பிரதமருக்கு மக்களிடையே நிலவும் பலமான ஆதரவைப் பயன்படுத்தி, ஆளும் லிபரல் டெமோக்ரடிக் கட்சியின் செல்வாக்கை உறுதிப்படுத்த அவர் விரும்புகிறார்.

பாதுகாப்புப் படைகளை நவீனப்படுத்தவும், பொருளாதார ஊக்கத் தொகைகளை வழங்கவும் மேலதிகமாக நிதி தேவைப்படுகிறது. இதற்கு மக்களின் நேரடி அங்கீகாரத்தைப் பெற அவர் திட்டமிட்டுள்ளார்.

இருப்பினும், ஜப்பான் மக்கள் தற்போது சந்தித்து வரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இந்தத் தேர்தலில் முக்கியப் பங்கு வகிக்கும்.

அண்மைய கருத்துக்கணிப்பில் 45 சதவீதமான மக்கள் விலைவாசி அதிகரிப்பையே தங்களின் முதன்மையான கவலையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பாது காப்பு மற்றும் இராஜதந்திர விவகாரங்களுக்கு 16 சதவீதம் மக்களே முக்கியத்துவம் அளித்துள்ளனர். (3)

## சீனாவில் ம
## வரலாறு கா

(பீஜிங்)

சீனாவின்மக்கள்எண்ணிக்கை, தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக வரலாறு காணாத அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என்ற பெருமையை, சீனா நீண்டகாலமாக தக்க வைத்திருந்தது. ஆனால், தற்போது அந்த நிலை மாறி, அந்நாட்டின் மக்கள் தொகை தொடர்ந்து சரிந்து வருகிறது.

பொருளாதார அழுத்தம், வேலைப் பளு, விலைவாசி உயர்வு போன்ற காரணங்களால் திருமணம், குழந்தை பெறுதலில் இளைஞர்கள் ஆர்வம் காட்டாததே இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகிறது.

கடந்த 2025ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## பற்றும் வரை ...க இருக்காது



...கைப்பற்றுவோம் என்ற அச்சுறுத்தல்கள் மூலம் ட்ரம்ப் நெருக்கடி அளித்து வருகிறார்.

கிரீன்லாந்தின் மீதான அமெரிக்காவின் கட்டுப்பாடு குறித்து ஒரு ஒப்பந்தம் எட்டப்படும் வரை, டென்மார்க் மற்றும் மற்ற ஏழு ஐரோப்பிய நாடுகளின் மீது 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று அவர் கடந்த சனிக்கிழமை அறிவித்தார்.

மேலும், நோபல் பரிசு நிராகரிக்கப்பட்டதன் பின்னரே, தாம் உலக விவகாரங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியதாகவும், இனி அமைதியைப் பற்றி பரப்புரை செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதை உணர்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே நோர்வே மீதும் ட்ரம்ப் 10 சதவீத வரி விதித்துள்ளார். (3)

## ...மக்கள் எண்ணிக்கை ...ணாத அளவில் வீழ்ச்சி


...இறுதியில், சீனாவின் மொத்த மக்கள் தொகை 140.5 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டைவிட 33.9 லட்சம் குறைவு. இந்த வீழ்ச்சி 2024ஆம் ஆண்டை விட வேகமானது என்று சீனாவின் தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சீனாவில், 2025இல் பதிவான புதிய பிறப்புகள் வெறும் 79.2 இலட்சம் மட்டுமே. அங்கு, ஆயிரம் பேருக்கு 5.6 சதவீதம் என்ற பிறப்பு விகிதமே உள்ளது. இது, 1949ஆம் ஆண்டு சீன குடியரசு தொடங்கியதில் இருந்து இல்லாத மிகக் குறைந்த அளவு.

அதே சமயம் சீனாவில் 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 32.3 கோடியாக உள்ளது. இது மொத்த மக்கள் தொகையில் 23 சதவீதத்தை எட்டியுள்ளது. இதனால் எதிர்காலத்தில் பணியாளர்கள் குறைவு, ஓய்வூதிய செலவு அதிகரிப்பு, உற்பத்திக் குறைவு போன்றவை ஏற்படும்.

எனவே சீன அரசு ஒரு குழந்தை கொள்கையை நீக்கி, மூன்று குழந்தைகள் வரை அனுமதித்து, திருமணம், குழந்தைப் பேறுக்கு பல ஊக்கத் திட்டங்கள், பண உதவி, வரி சலுகைகள், ஆணுறைக்கு வரி உயர்வு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனாலும் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருவது அரசுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. (3)

## பிச்சை எடுப்பவரின் மறுபக்கம் மிரண்டுபோன அதிகாரிகள்



(இந்தூர்)

பிச்சைக்காரர்கள் இல்லாத நகரத்தை உருவாக்கும் நோக்கில் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, பல இலட்சம் ரூபாய் சொத்துக்களுக்கு அதிபதியான "பிச்சைக்காரர்" ஒருவர் கண்டறியப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையினர் வீதிகளில் பிச்சை எடுப்பவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, இரும்பு ரிக்சா வண்டி ஒன்றில் அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்த "மாங்கிலால்" என்ற மாற்றுத்திறனாளியை மீட்டனர்.

அவரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் வெளிவந்த உண்மைகள் அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

அதாவது, மங்கிலாலுக்கு பகத்சிங் நகரில் மூன்று அடுக்கு மாடி வீடு ஒன்றும், சிவ் நகரில் 600 சதுர அடி பரப்பளவு கொண்ட மற்றொரு வீடும் சொந்தமாக உள்ளன.

மேலும், மங்கிலால் ஒரு Swift Dzire சிற்றூந்தை சொந்தமாக வைத்துள்ளார்.

வியப்பிற்குரிய விடயம் என்னவென்றால், அந்தச் சிற்றூந்தை ஓட்டுவதற்கு அவர் மாதாந்த வேதனத்திற்கு ஒரு ஓட்டுநரையும் பணியமர்த்தியுள்ளார்.

பிச்சை எடுப்பதன் மூலம் ஒரு நாளைக்கு (இந்திய மதிப்பில்) 500 முதல் 1000 ரூபாய் வரை ஈட்டும் இவர், அந்தப் பணத்தைக் கொண்டு அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலையும் செய்து வருகிறார்.

இதற்காக வாராந்திர மற்றும் தினசரி வட்டியை வசூலித்து வந்துள்ளார்.

ஏற்கனவே பல வீடுகள் இருந்தும், தனது உடல் ஊனத்தைக் காட்டி "பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் மற்றொரு வீட்டையும் பெற்றுள்ளார்.

மேலும் மூன்று முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டி வருகிறார்.

இந்நிலையில், தகுதியற்ற ஒருவருக்கு எவ்வாறு அரசுத் திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்பட்டது என்பது குறித்தும், அவரது சட்டவிரோத வருமானம் குறித்தும் அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (3)


## பிலிப்பைன்சில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய இயற்கை எரிவாயு படிமம்

(மணிலா)

தென்சீனக் கடலை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் புதிதாக இயற்கை எரிவாயு படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய தென் சீன கடலை ஒட்டியுள்ள கடற்கரைப் பகுதியில், ஏற்கனவே உள்ள எரிவாயு வயலுக்கு அருகில், புதிதாக ஒரு இயற்கை எரிவாயு படிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கிழக்காசிய நாடான பிலிப்பைன்சின் ஜனாதிபதி பெர்டினாண்ட் தெரிவித்துள்ளார்.

இது தங்கள் நாட்டின் மின்சார தட்டுப் பாட்டை போக்க உதவும் என, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பிலிப்பைன்சின் பலவான் மாகாணத்தின் வடமேற்கில் ஏற்கனவே மலாம்பாயா என்ற எரிவாயு வயல் உள்ளது.

இந்த வயலுக்கு 5 கிலோமீற்றர் தொலைவில் புதிய இயற்கை எரிவாயு படிமம் கண்டறியப்பட்டுள்ளது.

இதில், 9,800 கோடி கன அடி இயற்கை எரிவாயு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தினமும் இந்தக் கிணற்றில் இருந்து 6 கோடி கன அடி எரிவாயு எடுக்க முடியும் என முதற்கட்ட சோதனையில் தெரியவந்துள்ளது.

மேலும், இது ஆண்டுக்கு 1,400 கோடி கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போதுமானது அதாவது, 57 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும் என கூறப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாடகப் பேராசான் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் மறைவின் ஓராண்டு நினைவுப் பகிர்வும் உருவப்படம் காட்சிப்படுத்தலும் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி மேற்கு செம்முகம் ஆற்றுகைக்குழு இல்லத்தில் நடைபெற்றது.

# சீருடை வழங்கல்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஈச்சிலம்பத்தை பிரதேச செயலக பிரிவிலுள்ள அறநெறி பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு 355,000 ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் குறித்த அறநெறிப் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (8-60)


# விண்ணகப் பிறப்பின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 . 08 . 1935



மறைவு 23 . 12 . 2025

கடந்த 23.12.2025 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத்தந்தை

**அமரர். சீமாம்பிள்ளை அந்தோனிமுத்து**

அவர்களின் ஆன்ம அமைதிக்காக

நாளை 22.01.2026 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்து செபிப்பதோடு, அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

எமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் அழைப்பிதழை வழங்க முடியவில்லை. இதனை உணர்ந்து இவ்வழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அன்னாரின் இறுதி நல்லடக்க சடங்கில் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்து, அஞ்சலி செலுத்திய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகள்.

"அமல அகம்"
புனித லூர்து மாதா கோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை.

(C-4852)

தகவல்
குடும்பத்தினர்
அ.மோசஸ் - 077 190 7146
அ.பிலிப் - 077 919 0546


# இன்று ஒரு தகவல் 525

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மனிதன் - ஒரு மதிப்பீடு!

மனிதன் என்பவன் யார்? இப்படி ஒரு கேள்வியை உங்களைப் பார்த்து யாராவது கேட்டால், என்ன பதில் சொல்லுவீர்கள்?

"மனிதன் என்பவன் மனிதன் அவ்வளவு தான்!" இப்படித்தான் சொல்ல முடியும். இருந்தாலும் "மனிதன்" என்பதற்கு ஒரு விளக்கம் தேவை, ஒரு Definition தேவை. அதாவது ஒரு வரைவிலக்கணம் தேவை!

இதைப்பற்றி கிரேக்கர்கள் யோசிக்க ஆரம்பித்தார்களாம். ஏனென்றால் அவர்கள்தான் இதுமாதிரி இலக்கணம் வகுப்பதில் கெட்டிக்காரர்களாம். உலகத்திலே எத்தனையோ பொருட்களுக்கு வரைவிலக்கணம் வகுத்தாச்சு. மனிதன் என்பவனுக்கு இன்னமும் நாம் அதைச் செய்யவில்லையே. என்பது அவர்கள் கவலை!

இதற்காகவே கிரேக்க அறிஞர்களெல்லாம் ஒன்றாகக்கூடி ஒரு இடத்திலே உட்கார்ந்து யோசனை செய்திருக்கிறார்கள். ஒவ்வொருத்தராக அவரவர்களுக்கு தெரிந்த விளக்கத்தைக் கொடுக்க ஆரம்பித்து இருக்கிறார்கள்.

ஒருவர் எழுந்தாராம். "மனிதன் என்பவன் ஒரு இரண்டுகால் பிராணி!" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

மற்றவர்கள் எல்லாம் யோசித்துப் பார்த்தார்கள்.

இவர் சொல்கின்ற விளக்கம் சரியாகத்தானே இருக்கு என்று நினைத்தார்கள் சரி இதையே ஏற்போம் என்று எல்லோரும் ஒரு முடிவுக்கு வரும் சமயத்திலே ஒரு ஆள் எழுந்தார். "அவசரப்படாதீர்கள் கொஞ்சம் பொறுங்கள்!" என்றார். எங்கேயோ வெளியிலே போனார். கொஞ்ச நேரத்தில் என்னத்தையோ ஒரு துணியாலே மூடி கையிலே எடுத்துக்கொண்டு வந்தார். "என்ன அது?" என்றார்!

"நீங்கள் சொல்கிற மனிதன் இதுக்குள்ளே இருக்கிறான்!" என்றார். எல்லோருக்கும் ஆச்சரியம்! துணியை எடுத்துவிட்டுப் பார்த்தால் உள்ளே ஒரு கோழி!

"நீங்கள் சொல்லுகின்ற இலக்கணப்படி பார்த்தால் இதுவும் ஒரு இரண்டு கால் பிராணிதானே!" என்றார் அந்த ஆள். எல்லோர் முகமும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. மனித இலக்கணம் வகுத்தவர் மறுபடியும் எழுந்தார். "என்னுடைய வரைவிலக்கணத்திலே குறை இருக்கிறதை ஒத்துக் கொள்கிறேன். அதை இப்போது சரி செய்கிறேன்!" என்று சொல்லி மறுபடியும் சொன்னார்.

"மனிதன் என்பவன் இறகுகள் அற்ற ஒரு இரண்டுகால் பிராணி!" என்றார். உடனே எல்லோரும் இப்போது சரியாகிப் போச்சு. ஏனென்றால் இது கோழியையும் விலக்கிவிட்டது!" என்றார்கள். நம் ஆள் மறுபடியும் எழுந்தார்: "கொஞ்சம் பொறுங்கள் இதோ வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு வெளியே ஓடினார்.

மறுபடியும் கையிலே என்னத்தையோ துணியாலே மூடி கொண்டு வந்தார்.

"இப்போது என்ன வைத்திருக்கீறீர்கள் கையிலே?" என்றார்கள். "நீங்க சொல்ற மனிதன்தான் இப்பவும் உள்ளே இருக்கிறான்!" என்று சொல்லிவிட்டு துணியை எடுத்துக் காட்டினார்.

பார்த்தால் அதே கோழி! சிறகுகளையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்திருந்தார், "இதுதான் இறகுகள் அற்ற இரண்டுகால் பிராணி உங்கள் விளக்கப்படி மனிதன்? என்றார். அறிஞர்கள் பார்த்தார்கள், "சபை இத்தோடு கலையும்" என்று சொல்லி, எழுந்து விட்டார்கள்.

அதுமட்டும் இல்லை "மனிதனுக்கு வரைவிலக்கணம் காணமுடியாது" என்று ஏகமனதாக முடிவெடுத்து விட்டார்களாம்.

"அப்படி முடிவு எடுத்தது மூலமாக கிரேக்கர்கள் தம்மை அறிஞர்கள் என்று மறுபடியும் நிரூபித்துக் கொண்டார்கள்!" என்று எழுதியிருக்கிறார். ஒரு தமிழறிஞர் (கவிக்கோ அப்துல் ரகுமான்) உண்மைதான். மனிதனை எந்த வரைவிலக்கணத்துக்குள்ளேயும் அடக்க முடியாது! எந்த அளவுகோலாலும் அளக்க முடியாது. அதுதான் மனிதனுக்கிருக்கின்ற பெருமை!

பெரியார் என்ன சொல்கிறார் தெரியுமா? பணத்தாலே ஒரு மனிதனை மதிக்கிறது என்றால் ரிசர்வ் பாங்கைத்தான் மதிக்க வேண்டும்! படிப்பாலே ஒரு மனிதனை மதிக்கிறது என்றால் லைப்ரரியைத்தான் மதிக்க வேண்டும்! அறிவாலே ஒரு மனிதனை மதிக்கிறது என்றால்கலைக் களஞ்சியம் இருக்கே என்சைக்ளோபீடியா. அதைத்தான் மதிக்க வேண்டும்!

அதனாலே எப்போது மனிதனுக்கு மதிப்பு என்றால் அவன் மனிதத் தன்மை உள்ளவனாக நடந்துகொள்ளும்போதுதான்! மனிதநேயம் இல்லாத வாழ்க்கை, மனித வாழ்க்கையே அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்! என்பதற்காகத்தான் இந்தத் தகவல், ஒருவன் சொன்னான்.

"இந்த ஆள் ஒரு உண்மையான மனிதன் சார்! இவர் தன்னுடைய வாழ்க்கையிலே நிறைய வளர்ச்சி கண்டிருக்கிறார்!" என்றான். "எப்படி?" என்று கேட்டேன். இவர் பிறக்கும்போது 1 1/2 அடிதான் இருந்தார். இப்போது 6 1/2 அடி இருக்கிறார் இதுவொரு நல்ல வளர்ச்சிதானே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2026: உலக பெண் விவசாயிகளுக்கான வருடம்



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இவ்வருடத்தை ஐக்கியநாடுகள் தாபனத்தின் ஓரங்கமான உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் உலக பெண் விவசாயிகளுக்கான வருடமாக பிரகடனப்படுத்தியிருக்கின்றனர். இது ஒரு முக்கியமான மைல் கல்லாக நாம் காணலாம். காலங் காலமாக பெண்களை தெய்வத்துக்கு சமமாக மதிக்கின்ற முறைமை இருந்து வருகின்றது. மனைப்பொருளாதாரத்தில் பெண்ணின்றி செயற்பாடே நின்றுவிடும் என்பது அனைவரும் அனுபவத்தால் உள்ளுணர்வால் அறிந்து கொண்ட உண்மை.

பூமித்தாயை, நதிகளை, மரங்களை வாகனங்களை இன்னும் பலவற்றை பெண்களுக்கு உவமையாக்கியும் மகிழ்ந்திருக்கின்றது எமது சமூகம். விவசாயத்தொழிலில் பெண்களின் வகிபாகம் மிகவும் முக்கியமானது. பணத்தை சேமிப்பதும் தேவையான போது அதனை பக்குவமாக செலவழிப்பதும் இயற்கையாகவே பெண்களிடம் இருக்கின்றது.

### விவசாயமும் வாழ்வியலும்


எமது விவசாய செய்கை குடும்ப பின்னணியுடன் பின்னிப்பிணைந்துள்ளது. குடும்ப வேளாண்மையின் தனித்துவம் பற்றியும் அதிலிருந்து கிடைக்கும் நன்மைகளை கணிப்பிட்டு ஒரு தசாப்தத்துக்கான குடும்ப வேளாண்மை என உலக உணவு மற்றும் விவசாய தாபனம் 2019-2028 காலப்பகுதியை அறிவித்திருந்தது. இதில் நாம் எதிர்பார்த்த நன்மைகளும் கிடைத்தன. ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உதவியுடன் அமைக்கப்படும் அந்த குடும்பத்துக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்யும் பயிர்ச்செய்கை திட்டமிட்டபடி குடும்பங்களிலுள்ள வயதுவேறுபாடுடைய உறுப்பினர்களை ஒன்று திரட்டி சிறியளவிலோ அல்லது இருக்கின்ற நிலப்பரப்பிற்கேற்ப நடந்தேறுகின்றன. விவசாயம் என்பது தொழிலல்ல எமது வாழ்வியல். உணவுற்பத்தி செய்பவன் இல்லையேல் உண்பவனுக்கு ஏது உணவு. உணவுற்பத்தியில் ஆண்களுக்கு உற்சாகங்கொடுப்பதும் ஒத்தாசை புரிவதும் பெண்களே. இன்னும் வேலையாளாக பணிபுரியும் பெண்களுக்கான ஊதியம் ஆண்களை விட குறைவாகவே வழங்கப்படு கின்றது. ஆணுக்கு பெண் சமம் என பேசிவிட்டு பெண்களுக்கான ஊதியத்தை குறைப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது.

### குடும்ப விவசாயம்

குடும்ப விவசாயத்தில் ஒரு குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினரின் பங்களிப்பும் இருக்கும். வயது வித்தியாசத்தை கருத்தில் கொண்டு அவரவர் தமக்கிணைவான வேலைகளைப் பணிபுரிந்தாலே அதனது வளர்ச்சிக்கு போதுமானதாகும். குடும்ப விவசாயத்தில் உருவாகும் வீட்டுத்தோட்டத்தை தீர்மானிக்க திட்டமிட அதனை அழகுற ஆக்குவதற்கு பாடசாலை மாணவ மாணவிகளை பயிற்றுவிக்கலாம். இதற்காகத்தான் பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டங்களை அமைத்து மாணவ மாணவியருக்கு பயிர்ச் செய்கையின் நுணுக்கங்களை பயிற்றுவித்து அந்த அறிவினை தத்தமது குடும்பங்களிலும் உருவாக்கிக் கொள்வதோடு சுத்தமான நஞ்சற்ற உணவினை தாமே அறுவடை செய்து அதனை விரும்பியவாறு மதிப்பேற்றமும் செய்து அதனை தமது உணவுக்காகவும் மிஞ்சியதை விற்கவும் வழி கிடைக்கின்றது. இவ்வாறு விற்பதன் மூலம் மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்ய பணமும் கிடைத்து விடும்.

அவரவர் மனைகளில் உருவாகும் வீட்டுத்தோட்டத்தில் குறிப்பாக பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கக்கூடிய பயிர்களை கனிகளை மரக்கறி வகைகளை இன்னும் மூலிகைத் தாவரங்களை உற்பத்தி செய்யலாம். சந்தையில் கிடைக்காத உள்ளூர் மரக்கறி வகைகளை தேடிப் பெற்று அவற்றை உணவுக்காக பயன்படுத்திக் கொள்ளலாம். நிலப்பரப்பு குறைவாக உள்ள மனைகளில் நிலைக்குத்தான விவசாயத்தையும் கடைப்பிடித்து பயிர்களை வளர்த்துக் கொள்ளலாம். இன்னும் நுண்பச்சை தாவரங்களான மைக்குரோகிறீன்ஸ் எனப்படும் சிறிய தாவரங்களை வளர்த்து அவற்றையும் உணவாக்கிக் கொள்ளலாம். எமது பகுதியிலுள்ள ஊட்டச்சத்து குறைபாடு சரியான அளவில் காலத்துக் காலம் அளந்தறியப்படவில்லை. எப்படியிருப்பினும் எமக்கு தேவையான சமமான உணவு நிறைந்த ஊட்டச்சத்துள்ள உணவு இன்னும் அவ்வாறு குறைபாடுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கான ஊட்டச்சத்தினை வழங்க ஆவனசெய்தல் வேண்டும். மாணவர்களை வீட்டுத்தோட்டத்தை உருவாக்க அதனை பயன்பாடுள்ளதாக மாற்ற அறிவியல் ரீதியில் சிந்திக்க, இறுதியில் தமது வாழ்க்கையை செப்பனிட வழிசெய்வோம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு..



### பெண்ணியமும் உணவுற்பத்தியும்

பெண்களுக்கான சமஉரிமை பற்றி இப்போதெல்லாம் ஆங்காங்கே கருத்தரங்குகள் பேச்சுக்கள் என்பனவற்றில் விளங்கமாக எடுத்துரைத்தாலும் அவரவர் மனைகளில் பெண்ணியத்துக்கான சமஉரிமை மற்றும் அங்கீகாரம் என்பன வழங்கப்படல் வேண்டும். ஆண்களின் மனதில் பெண்களுக்கான சமஉரிமை பற்றி சிந்திக்கும் போதே பெண்களுக்கான உயர்வு பற்றிய நிலை உருவாகியிருக்கின்றது. மனதளவில் பெண்களை சரிசமமாக நடைமுறையில் இன்னும் உயர்வாக பெண்களுடன் வாழவேண்டும். தாய், தமக்கை, தங்கை, மகள் என பலவகை உணர்வுபூர்வமான வாழ்க்கை நிலைகளுக்கு எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். நாமாக நினைத்துவிட்டால் அனைத்தும் சாத்தியமே. பெண்கள் விவசாய செய்கையில் முழுமையாக ஈடுபடுதலை அந்த குடும்ப உறுப்பினர்கள் உறுதிசெய்வதோடு அவர்களுக்கான சமஅந்தஸ்தும் அவசியம் வழங்கப்படல் வேண்டும். விட்டுக் கொடுப்புக்களில் ஆணுக்கு பெண் சளைத்தவளல்ல. அனைத்து விடயங்களையும் கனகச்சிதமாக செய்யும் பாங்கும் அதன் மூலம் குடும்பத்து பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பும் குடும்ப-சமூக வலைக்கட்டமைப்புக்குள் சிக்கியிருக்கும் பெண்களுக்கான அடிப்படை கல்வியறிவு மற்றும் அவர்களுக்கான திறன் விருத்தி அனைத்தும் கிடைக்க வழிசெய்தல் அவசியமானதாகும். குடும்பமொன்றில் பெண்படித்திருந்தால் அவரைப் பின்தொடர்ந்து ஏனைய பெண்களுக்கும் படிக்கவேண்டுமென்ற உந்துதல் இருக்கும். பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களில் பெண்கள் தனித்து நின்று குடும்ப சுமையை தூக்கி நிறுத்துவதும் தம்மை விவசாயத்தில் அர்ப்பணித்து தமக்கு தேவையான உணவினை உற்பத்தி செய்யவும் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்யவும் முடியும்.

### கல்வியில் பணியாளரில் பெண்களின் வகிபாகம்

பெண்களுக்கான கல்வியறிவு இந் நூற்றாண்டில் மிக அவசியமானதாகும். கற்பதன் மூலம் பெண்கள் உலகத்தைப் பற்றியறியவும் தத்தமது தேவைகளை பூர்த்தி செய்யவும் ஆணின் துணையறுபட்டால் தனித்து நின்று தமது குடும்பத்தை காக்கும் உற்சாகமும் கிடைக்கும். பெண்கள் கற்பதனால் குடும்ப அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். தமது சொந்த காலில் நின்று அக்குடும்பத்தை உயர்த்தும் திறனையும் விருத்தி செய்ய வழிகிடைக்கும். சமகாலங்களில் விவாகரத்து சாதாரண விடயமாக மாறி வருகின்றது. இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களேயாகும். பெண்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் தமது பிள்ளைகளின் மேன்மைக்கும் பாடுபடவேண்டிய நிலை உருவாகி விடுகின்றது. ஆனாலும் தம்மையே உருக்கி குடும்பத்தினை தாங்கி பிள்ளைகளை படிக்க வைத்து ஆளாக்கும் நிலை அவர்களுக்குள் உருவாகின்றது. பலபெண்கள் விவாகரத்து பெற்றும் விதவைகளாகவும் பெற்ற கல்வியை அடிப்படையாக வைத்து தம்மை உயர்த்தி சமூகத்தில் சம நிலையில் வாழ்ந்தும் வருகின்றார்கள். ஆண்களால் புறக்கணிக்கப்பட்ட பெண்களின் தன்னம்பிக்கையும் முயற்சியும் அவர்களினால் விவசாயந் தொடங்கி அனைத்து வேலைகளையும் செய்யும் திறனும் அதிகரிக்க வாய்ப்பு க்கள் வழங்கப்படல் வேண்டும். எதை யும் தாங்கும் திறனுள்ள பெண்களின் பங்களிப்பு எமது சமூகத்தின் அனைத்து துறைகளிலும் மிளிரத் தொடங்கியதனை அவதானிக்கலாம்.

### தேனீகுடியில் பெண்களின் ஆளுமை

ஒரு தேனீக்குடியில் இராணித் தேனி மற்றும் வேலையாள் தேனீக்கள் அனைத்தும் பெண்களே. ஆண்களின் எண்ணிக்கை குறைவாகவும் அவர்களின் பங்களிப்பும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கும். சமூக அந்தஸ்துள்ள பூச்சிகளில் முக்கியமானதாக கருதப்படும் தேனீக்களின் வாழ்க்கை அவற்றின் நம்பிக்கை, அவர்களுக்கிடையிலான பிணைப்பு அனைத்தும் எமக்கான பாடங்களாகும். தேன்குடியில் மகரந்த மணிகள் மற்றும் தேன் சுரப்பை தேடிபெற்றுவரும் வேலையாள் தேனீகள் அனைத்தும் பெண்களாக இருப்பதால் அத்தனை துடிதுடிப்பும் இயக்கமும்.

எமது விவசாய உணவுத் தொகுதியினை கட்டமைக்கும் பொறுப்புக்குள் பெண்களை உள்ளீர்த்துவிட்டால் எமக்குத் தேவையான உணவும் ஊட்டச்சத்தும் கிடைத்துவிடும். பெண்கள் விவசாயத்தில் வகிக்கும் வகிபாகம் மனைப் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பதற்கும் மனைக்குத் தேவையான உணவு ஊட்டச்சத்து என்பனவற்றை பெறுவதற்கு உந்து தலாக இருக்கும். பெண்களின் வேலைக்கான வேதனம் முழுமையாக அளந்தறியப்படுவதில்லை. அதனால் அவர்கள் எந்தவொரு வேலை செய்தா லும் குறைவாகவே மதிப்பிடப்படு கின்றனர். ஊதியமும் குறைவாகவே வழங்கப்படுகின்றது. சமனிலை சமத் துவம் என்பதனைப் பற்றி சிந்திக்கும் எவரும் பெண்களுக்கான சமஉரிமை வழங்கவே பாடுபடுவர். பெண் விவசாயிகளை வாழ்த்துவோம் அவர்களுக்கான சமஅந்தஸ்தை வழங்கு வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 960





"அவர் மட்டுந்தான் போனாரா?" "ஆமாம் கிழவர் மட்டுந்தான் போனார் இளைய ராணி போகவில்லை."

"அந்தக் கிழவரைப் போன்ற வீராதி வீரனை எங்கே பார்க்கப் போகிறோம்? என் பாட்டனார் மலையமானைக் கூடப் பழுவேட்டரையருக்கு அடுத்தபடியாகத்தான் சொல்ல வேண்டும்".

ஐயா! அந்தக் கிழவர்களைப் பற்றியெல்லாம் பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன். தங்களுடைய வீரத்தைப் போர்க்களத்தில் நேரில் பார்த்திருக்கிறேன். கடம்பூர் அரண்மனையிலும் பார்த்தேன். கிழவர்கள், குமாரர்கள் எல்லோரையும் எப்படி நடு நடுங்க அடித்துக் கொண்டிருந்தீர்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"அது உண்மைதான், ஆனால் எதற்காக அவ்வளவு தடபுடல் செய்தேனோ, அந்தச் சந்தர்ப்பம் நெருங்கி வந்திருக்கும்போது எனக்கு உள்ளமும் உடலும் நடுங்குகின்றன. என்னைப் போன்ற பயங்கொள்ளிக் கோழையை இந்தச் சோழ நாட்டிலேயே காணமுடியாது."

"இளவரசே! இன்று காட்டில் வேட்டையாடியபோது அப்படித் தாங்கள் பயந்து நடுங்கியதாகத் தெரியவில்லையே? வனவிலங்குகள், பட்சிகள், பின்னோடு வந்தவர்கள் எல்லோரையும் அல்லவா நடு நடுங்கச் செய்தீர்கள்?"

இவையெல்லாம் ஒரு தைரியத்தில் சேர்ந்ததா? கேவலம் ஒரு வேட்டை நாய் வேங்கைப் புலி மீது பாய்ந்து கொல்லுகிறது, காட்டுப் பன்றி மதயானையோடு சண்டைக்குப் போகிறது. வேட்டையாடும் தைரியம் ஒரு தைரியமா? வல்லவரையா, கேள்! நான் செய்த சூழ்ச்சி பலித்துவிட்டது. பழுவேட்டரையர் நந்தினியைத் தனியாக விட்டு விட்டுச் சென்று விட்டார். ஆயினும் அவளைத் தனிமையில் பார்த்துப் பேசுவதைப் பற்றி எண்ணினால் எனக்குப் பீதி உண்டாகிறது!" என்றான் ஆதித்த கரிகாலன்.


"ஐயா! அதற்கு காரணம் உண்டு இத்தனை காலமும் பழுவூர் இளைய ராணியைப் பற்றி ஒருவிதமாக எண்ணி இருந்தீர்கள். இப்போது அவர் தங்கள் சகோதரி என்பதை அறிந்திருக்கிறீர்கள். அவரோ தங்கள் குலத்தையே அழித்துவிட விரும்பும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அவரிடம் சொல்வது கஷ்டமான காரியம் தான். எனக்கு அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் என்னால் சொல்ல முடியவில்லையே?"

"நண்பா! நீ அறிந்து வந்து கூறிய செய்தி ஒவ்வொன்றும் திடுக்கிடச் செய்வதாகவே இருக்கிறது. இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் சிற்சில பழைய விடயங்களை யோசித்துப் பார்த்தால் உண்மையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. எனக்கும் அவளுக்குமிடையில் எப்பொழுதும் ஒரு மாயத்திரை இருந்து வந்தது. பழையாறை பெரிய பிராட்டியார், செம்பியன் மாதேவியார், நந்தினியுடன் நான் சகவாசம் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அந்த நாளில் வற்புறுத்திச் சொன்னார். ஆனால் உண்மை முழுவதையும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் இவ்வளவெல்லாம் நேர்ந்திராது".

(தொடரும்)




## முயற்சியுடையார் முன்னேறுவார்



தயிர் தோய்க்கப் பட்ட பாலில் இரண்டு தவளைகள் தவறி விழுந்துவிட்டன. பாத்திரத்தை விட்டு வெளியே வருவதற்கு அவற்றுக்கு வழியே தெரியவில்லை.

முதல் தவளை "இதிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன், செத்தேன்" என்று புலம்பியது. அதன் கால்கள் சக்தி இழந்தன. சற்று நேரத்தில் எல்லாம் அது பாலில் முழுகிச் செத்தது.இரண்டாவது தவளையோ, "இதிலிருந்து நான் எப்படியும் தப்புவேன். கடைசிவரை என் முயற்சியைக் கைவிடமாட்டேன்" என்று நினைத்தது. அதனால் அத் தவளை சோர்வில்லாமல் கால்களால் உதைத்துக் கொண்டே இருந்தது.

இப்படியே சிறிது நேரம் இருந்ததால் பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்தது.

வெண்ணெய் திரண்டு மேலே மிதக்கத் தொடங்கிற்று. சற்று நேரத்தில் அந்தத் தவளை மிதந்த வெண்ணெயின் மீதேறி நலமாக அமர் ந்தது. பிறகு ஒரே தாவலில் பாத்திர த்தை விட்டு வெளியே குதித்துத் தப்பித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையின் சக்தியை தூய குறிக்கோளுடன் இணைத்து செயற்படுத்தும்போது எதையும் எளிதில் சாதிக்கலாம். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் புத்திஜீவிகள் குரல்தர வேண்டும்

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை அநாகரிகமான முறையில் எதிர்க்கட்சிகள் சாடியதை தமிழ்ப் புத்திஜீவிகள் மற்றும் கல்வியாளர்கள் கண்டித்து விசேட அறிக்கையொன்றை வெளியிட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

தமிழ்ப் புத்திஜீவிகள் மற்றும் கல்வியாளர்கள் உள்ளிட்ட 55 பேர் ஒப்பமிட்டு இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், கலாநிதி ஹரிணி அமரசூரியவை பண்பாடற்ற முறையில் எதிர்க்கட்சிகளும் சில பௌத்த துறவிகளும் விமர்சித்திருப்பதை கண்டித்திருப்பதுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் கல்வி மறுசீரமைப்பு, தேவையான ஒன்று என்பதும் குறித்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆம், தமிழ் மக்கள் இந்த நாட்டின் தேசிய விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் தேசிய விவகாரங்களில் தங்களின் வகிபங்கை ஆற்றும்போதுதான், தேசிய விவகாரங்களில் தமிழ்த் தரப்புகளின் வகிபாகம் அவசியம் என்ற நிலைப்பாடு உருவாகும்.

உண்மையில் தமிழ்த் தரப்புகள் தங்களின் பிரச்சினைகளை மாத்திரமே கதைக்கின்றன. மற்றும்படி இந்த நாட்டின் விவகாரங்களில் அவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள் என்ற கருத்து நிலை தென்பகுதி மக்களிடம் இருப்பதை நாம் மறந்து விடலாகாது.

அந்தவகையில், புதிய அரசாங்கம் முன்னெடுத்துள்ள கல்வி மறுசீரமைப்பு என்பது சிங்கள மக்களுக்கானது மட்டுமல்ல அஃது இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்குமானது.

எனவே கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதை தமிழ்த் தரப்புகள் மிகத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும்.

அந்த வகையில், குறித்த அறிக்கையூடாக கல்வி மறுசீரமைப்பைத் தமிழ்ப் புத்திஜீவிகள் வரவேற்றிருப்பது சிங்கள மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமையும்.

அதேநேரம் பிரதமராகவும் கல்வி அமைச்சராகவும் இருக்கின்ற கலாநிதி ஹரிணி அமரசூரியவை கீழ்மைப்படுத்துவதென்பது பெண்ணியத்தைச் சாடுகின்ற - பெண்களை அவமானப்படுத்துகின்ற அநாகரிகச் செயல்.

எனவே பெண்களின் சமத்துவத்தை ஏற்றுக்கொண்ட - பெண்களைத் தாயாகப் போற்றுகின்ற உயரிய பண்பாட்டைக் கொண்ட தமிழ் இனம்; இன, மத பேதம் கடந்து பெண்களை வஞ்சிக்கின்ற விமர்சனங்களை துணிச்சலுடன் கண்டிக்க வேண்டும்.

அதை நம் தமிழ்ப் புத்திஜீவிகள் காலம் உணர்ந்து செய்திருப்பது உண்மையில் மன ஆறுதலைத் தருவதுடன் இவர்களின் அறிக்கை புதிய எழுச்சியின் புத்துருவாக்கம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, குறித்த அறிக்கையில் ஒப்பமிட்ட புத்திஜீவிகள் தமிழ் அரசியலின் சீராக்கம் பற்றியும் எங்கள் தமிழர் தாயகத்தின் அரச நிர்வாகக் கட்டமைப்பின் பலம் பலயீனம் பற்றியும் தங்களின் தகை சார் அறிக்கைகளை - கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

இஃது அரசியலில் பலயீனப்பட்டிருக்கும் எங்கள் இனத்துக்கு ஒரு புதிய பாதைக்கான ஒளியாக அமையும்.

# கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அனைவருக்கும் தெளிவுபடுத்த நடவடிக்கை

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக மக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் தெளிவுபடுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சில தரப்பினர் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு மத்தியில் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனவே இது குறித்து அனைத்துத் தரப்பினரையும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சை நிலைமை குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காக, தேசிய கல்வி நிறுவனத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் மேலும் இருவர் தற்போது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

கல்விச் சீர்திருத்தங்கள் நிறுத்தப்படவில்லை என்றும், அது தொடர்பான ஏனைய அனைத்துப் பணிகளும் தற்போது நடைபெற்று வருவதாகவும் கூறிய அமைச்சர், முதலாம் தரத்திற்குரிய கல்விச் சீர்திருத்தங்கள் எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் 6 ஆம் தரத்திற்குரிய புதிய பாடத் திட்டத்தை அமுல்படுத்துவது மாத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்தக் காலப்பகுதிக்குள் இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரையும் தெளிவுபடுத்தி நிலவும் வதந்திகளையும் குழப்பங்களையும் நீக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் எதிர்க்கட்சித் தரப்பினர் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். ஒரு தலைமுறையையே கல்வியின் ஊடாக மாற்றி, நாட்டின் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிக்கச் செய்யும் இவ்வாறான பாரிய சீர்திருத்தத்தை, ஒரு சிறு குழுவினரின் சந்தேகங்களுக்கு மத்தியில் முன்னெடுக்க முடியாது என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. எனவே, இது குறித்து மக்களைத் தெளிவுபடுத்தவும் உரிய தரப்பினருடன் முறையான பேச்சுவார்த்தைகளை நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தச் செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக எதிர்க்கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குத் திகதிகளையும் நாம் ஒதுக்கியுள்ளோம். வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை அதற்கு முகங்கொடுக்க நாம் தயார். ஆனால் இன்றுவரை அந்தப் பிரேரணை கையளிக்கப்படவில்லை. ஒருவேளை அவர்கள் அதனைச் சமர்ப்பிக்காவிடின், அரசாங்கத்தின் சார்பில் நாமே நாளை வியாழக்கிழமை கல்விச் சீர்திருத்தங்கள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தைக் கொண்டுவந்து அனைத்துச் சந்தேகங்களையும் தீர்க்கத் தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7)

## உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கிலக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கிலக் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற STEPS நிறுவனத்தினால் 2025 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இரண்டாவது ஆங்கில கற்கை நெறியானது (Foundation English for School Leavers 120 மணித்தியாலங்கள் 20 நாட்கள்) எதிர்வரும் 05.02.2026 அன்று ஆரம்பிக்கப்படவிருப்பதால் ஆர்வம் உள்ள மாணவர்கள் 29.01.2026 ம் திகதிக்கு முன்னர் நாவலர் வீதியில் அமைந்துள்ள STEPS நிறுவனத்தில் (யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்) நேரிலோ அல்லது 0212224580 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது stepsmoe@gmail.com என்ற முகவரி மூலமாகவோ பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு பிரிவில் மாணவர் எண்ணிக்கை 24 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவு செய்யும் ஒழுங்கில் மற்றைய பிரிவுகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் கற்கைநெறிக் கட்டணமாக ரூபா இரண்டா யிரத்து ஐந்நூறு (2500/=) அறவிடப்படும் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும் என்றுள்ளது. (ம-7)

## அரச வாகனங்களுக்கு டிஜிட்டல் எரிபொருள் அட்டை அறிமுகம்

அரச வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் முறையில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) புதிய டிஜிட்டல் எரிபொருள் அட்டை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

அரச வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் டிஜிட்டல் பொருளாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய முறையின் கீழ், அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கு ஒரு சிறப்பு டிஜிட்டல் எரிபொருள் அட்டை வழங்கப்படும்.

இதன் மூலம் நாட்டிலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்தும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எரிபொருள் வீணாதல், மோசடிகள் மற்றும் ஒழுங்கற்ற செயற்பாடுகளைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும். (ம-7)

## கிளிநொச்சியில் இளம்பெண் விபரீத முடிவெடுத்துப் பலி

கிளிநொச்சி, புளியம்பொக்கணைப் பகுதியில் நேற்று முன்தினம் (19 ) இளம் குடும்பப் பெண் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி புளியம்பொக்கணை கலவெட்டித்திடலை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடைய இளம் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணின் மரணம் தொடர்பில், தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 02

என்.சொக்கன்

இதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால், இத்தனை விடயங்களும், பேர்ள் துறைமுகத் தாக்குதலுக்குச் சில தினங்கள் முன்பாகவே அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனால், இதையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்து, ஜப்பான் நம்மீது தாக்குதல் நடத்தப்போகிறது என்று அவர்களால் கண்டறிய முடியவில்லை.

அமெரிக்காவின் மிகப் பெரிய சறுக்கல் அதுதான். இத்தனை தகவல்களைக் கையில் வைத்துக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தாமல் பல் குத்திக்கொண்டிருந்தது சுத்த முட்டாள்தனமில்லையா?

இந்தக் கோணத்தில் யோசிக்கத் தொடங்கியபோதுதான், அமெரிக்காவுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிந்தது -இதுமாதிரி விடயங்களில், இராணுவத்தின் உளவுப் பிரிவை மட்டும் நம்பிப் பிரயோஜனமே இல்லை. வெளிவிவகாரங்களை அலசி ஆராய்வதற்காக ஒரு தனி உளவுத்துறை இருந்தால்தான் நல்லது.

1941 இல், அமெரிக்காவில் அப்படி ஓர் உளவுத்துறை இருந்திருந்தால், ஜப்பானியர்களின் நடவடிக்கைகளைக் கவனித்திருப்பார்கள், அவற்றைத் தொகுத்து, வரக்கூடிய ஆபத்தை அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரிவித்திருப்பார்கள். இந்த அசிங்கத்தைத் தவிர்த்திருக்கலாம்.

பேர்ள் துறைமுகத் தாக்குதலுக்கும், சிஜஏவின் உருவாக்கத்துக்கும் இடையே கிட்டத்தட்ட ஆறு வருட இடைவெளி. ஆனால், இப்படி ஓர் அமைப்பு நமக்குத் தேவை என்று அமெரிக்க அரசாங்கம் உணர்ந்து கொண்டது, அந்த மகா அதிர்ச்சிக்குப்பிறகுதான்.


### 2. அதிபுத்திசாலிகளின் படை

**"முரட்டு பில்"**

வில்லியம் ஜோசஃப் டொனொவனுக்கு (William Joseph Donovan) அவரது நண்பர்கள் சூட்டிய செல்லப் பெயர் இது.

டொனொவன் பேட்டை தாதா இல்லை. சட்டம் படித்த வழக்கறிஞர், இராணுவ அதிகாரி, உளவுத்துறை நிபுணர். இத்தனை அடையாளங்களையும் தாண்டி, அவருக்கு "முரட்டு"ப் பட்டம் நிலைத்துவிட்டது என்றால், அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. வாழ்க்கையில் நிறையப் போராடி முன்னுக்கு வந்தவர் டொனொவன். எதிரிகள் என்கிற வார்த்தையே அவருக்குப் பிடிக்காது. அதிதீவிரமான நாட்டுப்பற்று, அதற்காக யாரையும் பகைத்துக்கொள்ளத் தயங்கமாட்டார். அமெரிக்காவின் விரோதிகள் எல்லோரும் எனக்கும் ஜென்ம விரோதிகள் என்கிற எண்ணத்துடன் பாய்ந்து தாக்கக்கூடிய முரட்டு மனிதர்.

சாதாரணமாக, வழக்கறிஞர்கள் எல்லாம் நிறையப் பேசுவார்கள். ஆனால் டொனொவனுக்குப் பேச்சு அலர்ஜி, செயல்வேகம் தான் முக்கியம் என்பது அவருடைய கட்சி.



முதல் உலகப்போர் காலகட்டத்தில், வில்லியன் டொனொவன் தன்னுடைய தலைமையிலான இராணுவப் படையை மிகச் சிறப்பாக வழிநடத்தினார். இதற்காக, அமெரிக்காவின் மிகப் பெரிய இராணுவ விருதுகள் பலவற்றை வென்றவர் அவர்.

போருக்குப்பிறகு, சமர்த்தாக மீண்டும் தனது வழக்கறிஞர் தொழிலைப் பார்க்கப் போய்விட்டார் டொனொவன். அப்போதும், அமெரிக்க அரசாங்கம் அவரை விடுவதாக இல்லை, தொடர்ந்து பல முக்கியமான பதவிகளும் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

டொனொவனுக்கு உளவுத்துறையில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்ட காலகட்டம் இது. உலகம் முழுவதும் அமெரிக்காவுக்குப் புது விரோதிகள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்த அவர், இதையெல்லாம் நாம் தொடர்ந்து கண்காணிக்கவேண்டியது, கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்று அமெரிக்க அரசாங்கத்துக்கு வலியுறுத்தினார்.

இதனிடையே, இரண்டாம் உலகப் போர் தொடங்கிவிட்டது. அமெரிக்கா அதில் நேரடியாகப் பங்கேற்காவிட்டாலும், யாரேனும் ஏதாவது செய்து நம்மைச் சீண்டுவார்கள் என எச்சரித்தார் டொனொவன். வெளியிலிருந்து நமக்கு வரக்கூடிய ஆபத்துகளை அடையாளம் காண்பதற்காகவும் தவிர்ப்பதற்காகவும் ஒரு தனி உளவுத்துறையை அமைத்தாக வேண்டும்" என்று சிபாரிசு செய்தார்.

அவருடைய நச்சரிப்பு தாங்காமல், அமெரிக்க அரசு இதைப்பற்றித் தீவிரமாக சிந்திக்கத் தொடங்கியது. உலகப் போர்க் காலகட்டத்தில், மற்ற நாடுகள் என்ன செய்கின்றன, யார் யாரை ஆக்கிரமிக்கிறார்கள், யாருடைய பலம் எவ்வளவு என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்காக இப்படி ஓர் உளவு அமைப்பை ஏற்படுத்துவது நல்லதுதான் என்று முடிவு செய்தார்கள்.

அதாவது, டொனொவனின் வாதங்கள் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டன. நிரந்தர உளவுத்துறையாக அல்லாமல், போர்க் காலத்தில் மட்டும் பயன் படக்கூடிய ஓர் அமைப்பை உரு வாக்கத் தீர்மானித்தது அமெரிக்கா.

டொனொவனுக்கு இதில் முழுத் திருப்தி இல்லைதான். ஆனாலும், கிடைத்த வேலையை ஒழுங்காகச் செய்வோம் என்று அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார்.

1941 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், COI (Coordinator Of Information) என்ற ஓர் உளவுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பு, அமெரிக்க ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கியது.

ஆரம்ப காலத்தில், டொனொவனுக்கு வழங்கப்பட்ட உளவுப் பொறுப்புகள் மிகச் சவாலானவை. அநேகமாக அவை அனைத்தும், ஹிட்லர் என்கிற தனி மனிதரைச் சுற்றிவந்துகொண்டிருந்தன. அப்போது உலகம் முழுவதையும் ஹிட்லர் ஜுரம் தாக்கியிருந்தது. அந்த ஆள் நேரடியாக தங்களைச் சீண்டாவிட்டாலும், அவரால் நமக்கு ஆபத்து உண்டா, இல்லையா என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ள விரும்பியது அமெரிக்கா.

இந்த வேலைதான், டொனொவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது - ஹிட்லரின் நாஜிப்படைகள் உண்மையிலேயே பலமானவைதானா, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளில் ஹிட்லர் என்னவிதமான பாதிப்பை உண்டாக்கக்கூடும், இவரால் நமக்கு உடனடி அல்லது நீண்ட கால ஆபத்து உண்டா, இந்த ஆள் அமெரிக்காவின் நண்பரா அல்லது விரோ தியா?

இப்படிப் பல கேள்விகளுடன் உலகைச் சுற்றிவந்தார் டொனொவன். இராணுவத்துக்கு வெளியே இப்படி உலகத்தை உளவு பார்ப்பது அமெரிக்காவுக்குப் புதிய விடயம் என்றாலும், டொனொவனும் அவரால் உருவாக்கப்பட்ட உளவு அதிகாரிகளும் இந்த வேலைகளைச் சிறப்பாகவே செய்தார்கள்.

இதனால், ஹிட்லரின் நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்புகள் அமெரிக்காவுக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் அடிப்படையில்தான், அமெரிக்கா தனது அடுத்தடுத்த அரசியல் நடவடிக்கைகளை எடுத்தது.

ஆனால், இத்தனைக்குப்பிறகும், டொனொவன் எதிர்பார்த்ததுபோல, அமெரிக்கா தனது உளவு நடவடிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவத்தைத் தரவில்லை. காரணம், அவர்களுக்கும் உலகப் போருக்கும் நேரடிச் சம்பந்தமே இல்லை.

இதனால், அமெரிக்க அரசு பத்தோடு பதினொன்றாகதான் உளவுத்துறையைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஏதோ பிழைத்துப்போங்கள் என்று கடமைக்குச் சிலரை உளவுப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகள், சௌகரியங்கள் செய்து தரப்படவில்லை, முறைப்படி பயிற்சி அளிக்கப்படவில்லை, இதற்காகக் கூடுதல் பட்ஜெட் ஒதுக்கக் கேட்டால், மூக்கால் அழுதார்கள் அல்லது ஒதுக்கித்தள்ளிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் வீட்டுத்...

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய ஆளுநரான நா. வேதநாயகன் 2019ஆம் ஆண்டு யாழ்.மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய காலத்தில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை.

இதனால் அக்காலப் பகுதியில் வீட்டுத் திட்டங்களைப் பெற்ற பயனாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் நிலையில் மழை காலங்களில் இருக்க இடம் இல்லாமல் அல்லல்படுவது பல வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெறுகிறது.

தற்போதைய அரசாங்கம் பாரபட்சமற்ற அரசாங்கம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த ஆட்சியிடம் பெற்ற வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்காமல் தங்களது ஆட்சியில் புதிய வீட்டுத் திட்டங்களுக்கான கொடுப்பனவை வழங்குகிறார்கள்.

இந்தச் செயற்பாடு பாதிக்கப்பட்ட எமக்கு மிகவும் மனவேதனையைத் தருவதோடு தற்போதைய ஆளுநர் கூட இது தொடர்பில் மௌனமாக இருப்பது நமக்கு மிகுந்த மன வருத்தத்தைத் தருகிறது.

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வீதியில் நடந்து திரிகிறார். ஆனால் யாழ். மாவட்டத்தில் வீடுகள் இல்லாமல் அரைகுறை வீடுகளில் தங்கி உள்ளோரைச் சந்திப்பதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆகவே எமது பிரச்சினை தொடர்பில் வட மாகாண ஆளுநருக்கு மீண்டும் தெரியப்படுத்தியுள்ளோம். எமது பிரச்சினையை விரைந்து தீர்க்காவிடின் எமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தனர். (ம-7,33)

## வட தாரகையை...

அளித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலர் என்.பிரபாகரன், கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கடற்படைத் தளத்தில் இடம்பெற்றது. அதன்போதே வட தாரகையை இயக்குவது தொடர்பில் கடற்படைத் தளபதி உறுதியளித்தார்.

குறித்த கலந்துரையாடலில் நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடற்போக்குவரத்தில் அண்மைக்காலமாக பிரதேச மக்கள், அலுவலர்கள் மற்றும் சுற்றுலாவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து பிரதேச செயலர் தெளிவுபடுத்தினார்.

மேலும் அன்றாட சேவையில் ஈடுபட்டுவந்த வடதாரகை, குமுதினி மற்றும் சமுத்திரதேவா படகுகள் சமகாலப்பகுதியில் சேவையில் ஈடுபட முடியாத நிலையில் மக்களின் இடர்பாடுகளை முடிவிற்குக்கொணரும் வகையில் வடதாரகையை இயக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக கடற்படையின் வடபிராந்திய கட்டளைத்தளபதி உறுதியளித்தார்.(ம-7,33)

## பாடசாலைகள்...

முதல் அடுத்த மாதம் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை காரணமாக பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 02ஆம் திகதி வரை மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும்.

அதே நேரத்தில் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 03ஆம் திகதி முதல் ஏப்ரல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கொடிகாமம்...

டி.எஸ்.சூசைதாஸ் நேற்று (20) தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2010 டிசம்பர் 16ஆம் திகதி மந்தைவெளி, கொடிகாமம் பகுதியில் 60 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கோடரி மற்றும் பொல்லுகளால் தாக்கப்பட்டு மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், நேற்றுச் செவ்வாய்க்கிழமை வழக்கு தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டிருந்தது.

தீர்ப்புக்காக வழக்கு மன்றில் நீதிபதி டி.எஸ்.சூசைதாஸ் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிரிகளான இருவரையும் மன்று நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும் திகதியில் நிர்ணயிக்கப்படும் இடத்தில் குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தூக்கிலிடுமாறு இந்த மன்று பரிந்துரைக்கிறது" என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார். (ம-7,33)

## வாகன இறக்கு...

90 நாட்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு 3% வரி சேர்க்கப்படுவதாகவும், 5 மாத காலப்பகுதிக்குள் இது சுமார் 45% வரை அதிகரிப்பதாகவும், இதனால் நுகர்வோரே அந்த மேலதிக பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்படுவதாகவும் ரோஹித அபேகுணவர்தன இதன்போது கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர், வாகன இறக்குமதியின் போது இறக்குமதியாளர்கள் மீது இந்த மேலதிக வரி விதிக்கப்பட்டுள்ளமையானது, நாட்டிற்குள் அந்நிய செலாவணியைத் தக்க வைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்பிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-7)

## 19...

திகதி வரை வீதி விபத்துக்களால் 120 பேர் உயிரிழந்துள்ளனர்.

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரியான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த தரவுகளை வெளியிட்டார்.

இதன்படி இலங்கையில் இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து ஜனவரி 19 வரையிலான காலப்பகுதியில் 113 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில் 120 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 216 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், 490 சிறு விபத்துக்களும் பதிவாகியுள்ளன.

மேலும் விபத்துகள் காரணமாக 159 சொத்து சேதச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. விபத்துகளில் உயிரிழந்தவர்களில் பாதசாரிகளும் உந்துருளியில் பயணித்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 6080 — W 1 4 2 3 1 9
அத சம்பத — W 2 3 1 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0655

சுப தவசக் — திகதி 2026.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 195 — விருச்சிகம் 05 24 53 — 1928

தன நிதானய — திகதி 2026.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 2110 — A 09 39 41 74 A

மெகா பவர் — திகதி 20/01/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2428 — U 15 21 23 59 60

ஜய — திகதி 2026.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0348 — I 2 2 2 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4322 — சீட்டிழுப்பு திகதி 20.01.2026 — K 15 27 28 48 — K

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1389 — கடகம் 29 42 54 62 கடகம்

சுபிரி டன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 20.01.2026 — வெற்றி வாரம் 0788 — V 1 7 4 4 9 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,343,911.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3054 — சீட்டிழுப்பு திகதி 2026.01.20 — செவ்வாய்க்கிழமை — 24 28 45 55 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,258,346.40

சனிதா — திகதி 20.01.2026 — வெற்றி வாரம் 5215 — 24 28 29 57 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,568,413.20

சசிரி — 884 — 20.01.2026 — செவ்வாய்க்கிழமை — 23 30 35 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4766 — சீட்டிழுப்பு திகதி 20.01.2026 — செவ்வாய்க்கிழமை — 07 22 49 59 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,962,645.20

கப்ருக — F 28 02 32 48 64 — 2230 — 20.01.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.622,079,677.60

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2880 — சீட்டிழுப்பு திகதி 2026.01.20 — 13 21 32 45 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,299,975.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4856)

076 825 7716 (ஆகாஸ்)

மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

076 315 6470

ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna. (C-4853)

# விபத்து

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மாற்றுத்திறனாளி ஒருவரின் மோட்டார்சைக்கிளை யாழ். நோக்கிப் பயணித்த பட்டா ரக வாகனம் ஒன்று மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த மாற்றுத்திறனாளி அங்கிருந்தாரோல் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மணப்பெண் தேவை

01. மாவிட்டபுரம், இந்து. 1980, ஆயிலியம், Accountant, Divorce, Malaysia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39225)
02. Jaffna, இந்து. 1982, அத்தம், Masters in Electrical Engineering, USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24750)
03. சாவகச்சேரி, இந்து. 1980, சித்திரை, BSc, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56286)
04. காரைநகர், இந்து. 1990, விசாகம், MSc, Lecturer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56879)
05. புங்குடுதீவு, இந்து. 1989, பூராடம், A/L, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55697)
06. காரைநகர், இந்து. 1991, அனுசம், BSc Engineering, singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (55580)
07. இந்து. 1989, பரணி, IT Degree, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54881)
08. சுழிபுரம், இந்து. 1991, சதயம், BBA Masters, Assistant Manager, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53902)
09. பருத்தித்துறை, இந்து. 1989, திருவோணம், BA in Law, Data Engineer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52976)
10. வல்வெட்டி, இந்து. 1986, சதயம், Bachelor degree, Manager, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (50435)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (1944)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 992 1494

## சுன்னாகத்தில் புத்தகசாலை விற்பனைக்குண்டு

50 வருட காலம் சேவையாற்றிய புத்தக நிறுவனம் ஒன்று புத்தகங்கள், கொப்பிகள் பாடசாலை உபகரணங்களுடன் கைமாறவுள்ளது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

ஆச்சரியம் தரும் விலைக்கழிவு தரப்படும்.

தொடர்பு : 076 749 0219 (C-4854)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு


- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4Km தூரம்
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்துவிதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457 (6606)

# மரண அறிவித்தல்



மலர்வு
17.04.1938

உதிர்வு
19.01.2026

## வரணி - சிற்றம்பலம் துரைராசா

(முன்னாள் தவிசாளர் - பிரதேச சபை சாவகச்சேரி,
கொத்தனி அதிபர் - வரணி மத்திய கல்லூரி,
அதிபர் - முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரி,
கொத்தனி அதிபர் - அக்கராயன் ம.வி, அதிபர் - பூநகரி ம.வி,
ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
'தலைவர்'- விவசாய சம்மேளனம் - வரணி)

கரம்பைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் இடைக்குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் துரைராசா அவர்கள் கடந்த 19.01.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - அபிராமி தம்பதியினரின் மூத்த மகனும் கதிரித்தம்பி வாத்தியார் - பாறுபதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற உமாமகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் திருச்செல்வராசா(பொறியியலாளர் - லண்டன்), செல்வராணி வாரித்தம்பி, காலஞ்சென்ற தயானந்தராசா(ஞானவேல்) - மாவீரர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வாரித்தம்பி(ஓய்வுபெற்ற பதிவாளர் - நீதிமன்றம்), மனோன்மணி, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் சிவராசசிங்கம்(ஓய்வுபெற்ற பதிவாளர் - நீதிமன்றம்) அவர்களின் சகலனும் திருக்குமரன்(லண்டன்), செந்தில்குமரன்(நோர்வே), சியாமளா (பல்மருத்துவர் - லண்டன்), இளங்குமரன்(விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), குன்றக்குமரன்(இயந்திரவியலாளர்) மற்றும் காலஞ்சென்ற இராசக்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீரஞ்சினி, கௌசலை, தாமோதரன்(பொறியியலாளர்), மேகலா (ஆசிரியர் - யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை), மதிவதனி ஆகியோரின் மாமனாரும் பலராம் (பொறியியலாளர்), சீத்தாராம், லக்ஷ்மன், மதுசன், சௌமியா, கவின், ராம்குமரன், மகிழினி, கவின்குமரன், புகழினி, அபிஷா, மியூனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.01.2026 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் இடைக்குறிச்சி இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி.

தகவல் : குடும்பத்தினர்
077 352 5339

(C-4855)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org